*[முனைவர் பழனிவேல் தியாக ராஜன்] [2022 ஏப்ரல் 28*

*செய்யலாம் என்று சொல்லாமல், நூறு* conditions *போட்டு, இந்தத் திட்டத்தில் சேர்க்க வேண்டும். அதற்குப்பிறகு முதல் வருடம் நாங்கள் 20, நீங்கள் 50. அடுத்த வருடம் என்று சொல்லி, நீங்கள் எங்களைக் கழட்டிவிட்டு, மூன்று வருடங்களில் கழட்டிவிட்டு, அவர்களின் திட்டத்தில் நம்மைப் பின்பற்ற வைத்துவிட்டு, முழு* cost*-யும் நம் தலையில் கட்டும்போது, இது கூட்டாட்சித் தத்துவமா? (மேசையைத் தட்டும் ஒலி) அதனால், யார் என்ன சொன்னாலும் கணக்கு, கணக்குத்தான். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொல்லிவிட்டார். முழுப் பூசணிக்காயைச் சோற்றில் புதைக்கப் பார்க்கிறார்கள். அது இப்போது நடக்காது. ஆனால். . . (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இருங்கள். நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லி முடிக்கட்டும். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேச இருக்கிறார்கள். அதற்குப்பிறகு உங்களுக்குப் பேசுவதற்கு வாய்ப்புத் தருகிறேன்.*

**மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்:** *ஆனால், அடிப்படையில் நான் கேட்கவேண்டியது, கணக்கை யார் பேசினாலும் மாற்றவே முடியாது. ஆனால் தத்துவத்தை எப்படி தலைகீழாக மாற்றிக் கேட்கிறீர்கள்? மக்களிடம் இருக்க வேண்டிய உண்மையான கேள்வி, யார் கூட்டாட்சித் தத்துவத்தைப் பின்பற்றுகிறார், யார் பின்பற்றவில்லை என்பதுதான். (மேசையைத் தட்டும் ஒலி) நன்றி.*

## (ஆ) சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் ஏற்பட்ட தீ விபத்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

***திரு. எடப்பாடி K. பழனிசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் ஏற்பட்ட தீ விபத்து குறித்து அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.*

*சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் தமிழகம் மட்டுமல்லாமல், அண்டை மாநிலங்களிலிருந்தும் பல்லாயிரக்கணக்கானவர்கள் தினந்தோறும் வந்து சிகிச்சை பெற்று வருகிறார்கள்.*

*2022 ஏப்ரல் 28]*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இன்றைக்கு காலையில்தான் அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த. . .*

**திரு. எடப்பாடி K. பழனிசாமி:** *முக்கியமான செய்தி.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *ஆமாம்.*

**திரு. எடப்பாடி K. பழனிசாமி:** *நேற்றைக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மருத்துவமனைக்குச் சென்று பார்த்ததை, பத்திரிகைச் செய்தியில் பார்த்தேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலும் சபையில் சொல்லியிருக்கிறார்கள்.*

**திரு. எடப்பாடி K. பழனிசாமி:** *அப்போதுதானே அங்கே இருக்கின்ற நோயாளிகளுக்கு நிவாரணம் கிடைக்கும். இது மிக முக்கியமானது. இது நோயாளிகளுடைய பிரச்சினை, மற்ற பிரச்சினையாக இருந்தால்கூட தள்ளி வைக்கலாம். தினமும் ஆயிரக்கணக்கான நோயாளிகள் வந்து சிகிச்சை பெற்று செல்கிறார்கள்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *ஒரு நிமிடம், அதாவது, கவன ஈர்ப்பு, ஒத்திவைப்புத் தீர்மானம்,* Zero Hour. *நான் மூன்று விஷயத்தைச் சொல்லிவிடுகிறேன். ஒரு நிமிடம் அமருங்கள். நான் சொல்லிவிட்டு உங்களையே பேசுவதற்கு அழைக்கிறேன். விதி 55, விதி 56,* Zero Hour. *நீங்கள் விதி 55–ல் கொடுத்திருந்தால்* list*–ல் ஒரு நாளைக்கு இரண்டு எடுத்துக்கொள்வோம். அது துறைக்குச் சென்று பதில் பெற்று, பதில் வந்த பிறகு பதில் சொல்வார்கள். முதலமைச்சராக இருந்தவர்கள், அமைச்சராக இருந்தவர்கள் உங்கள் எல்லோருக்கும் தெரியும். அந்த அடிப்படையில் காலையிலே தந்திருக்கிறீர்கள். இருந்தாலும், அவசரப் பொது முக்கியத்துவம் கருதி, உங்களைப் பேசுவதற்கு அனுமதித்திருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர்கள் பதில் சொல்லத் தயாராக இருந்தால் பதில் சொல்லலாம். இனிமேல் சிறப்புக் கவன ஈர்ப்பு என்று எடுக்க வேண்டாம் என்று மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நேற்றே அவை முன்னவர் அவர்கள் சிறப்புக் கவன ஈர்ப்பு என்று,–இது புதியதாக இடையில் வந்தது. இது தேவையா,–தேவையில்லை என்று நேற்றே அவர்கள் முடிவு செய்திருக்கிறார்கள். ஆகவே, இனிவருங்காலங்களில் விதி 55 என்றால், இரண்டு,* list*–ல் இருக்கும். பதில் இருப்பதற்கு*

மட்டும்தான். Zero Hour–ல் நீங்கள் பேசினால், உங்களுடைய கருத்து பதிவு செய்யப்படும். அதற்குப் பதில் இருக்குமா என்று தெரியாது. நீங்கள் அதை மனதில் வைத்து பேச வேண்டும்.

*முற்பகல் 11–40*

நேற்றே மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் நேரில் சென்று என்னென்ன செய்யத் தேவையோ, அவை அனைத்தையும் செய்து, (குறுக்கீடு) எந்தவிதமான அசம்பாவிதமோ, உயிர் சேதமோ இல்லாமல் அனைவரையும் பாதுகாத்துள்ளார்கள். அங்கு என்ன நடந்தது என்பதை சபையிலும் விளக்கமாகப் பதிவு செய்திருக்கிறார். மேலும் அந்த நேரத்தில் நீங்கள் இருந்தீர்களா என்பது எனக்குத் தெரியவில்லை. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

**திரு. எடப்பாடி K. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்களும் ஆளும் கட்சியாக இருந்தோம். அப்போது திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்கட்சியாக இருந்தது. Zero Hour–ல் முக்கியமான நிகழ்வுகள் குறித்து அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருவது வழக்கம். எல்லா ஆட்சிக் காலத்திலும் இருந்திருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதுதான் பேசியாகிவிட்டதே. மாண்புமிகு உறுப்பினர் பேசுங்கள்.

**திரு. எடப்பாடி K. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நாங்களும் கேட்கிறோம். நேற்றையதினம் முக்கியமான பிரச்சினை. 11 பேர் உயிரிழந்த பிரச்சினை. அதைத்தான் நாங்கள் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவந்தோம்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையை நவீன மருத்துவமனையாக ஆக்குவதற்கு முடிவெடுத்ததன் அடிப்படையில், Tower 1, Tower 2 மற்றும் Tower 3 என 3 பாகங்களாகக் கட்டப்பட்டு, உயர்தர சிகிச்சை, நவீன சிகிச்சை செய்யக்கூடிய அளவிற்கு இன்றைக்கு அந்த மருத்துவமனை மேம்படுத்தப்பட்டிருக்கிறது. இந்நிலையில், நேற்று 27–4–2022 காலை முகக் கவசம், கையுறை, PPE kit, oxygen cylinder போன்ற உபகரணங்களை சேமித்து வைத்திருக்கும் சேமிப்புக் கிடங்கில் தீப்பற்றி, அது மளமளவென பரவி கட்டடத்தின் மேலே உள்ள தளங்களுக்குப் பரவியது. அங்கிருந்த நோயாளிகள் அனைவரும் மீட்கப்பட்டனர். தீ விபத்து காரணமாக மருத்துவமனை வளாகம்

2022 ஏப்ரல் 28] [திரு. எடப்பாடி K. பழனிசாமி]

முழுவதும் புகை மண்டலமாகக் காட்சியளித்தது. அந்த Block–ல் சிகிச்சை பெற்று வந்த நோயாளிகளை வெளியேற்றும் பணியில் ஈடுபட்டிருந்த 5 மருத்துவர்கள், செவிலியர்கள், மருத்துவ உதவியாளர்கள் ஆகியோருக்கு அங்கு ஏற்பட்ட புகையினால் மூச்சுத் திணறல் ஏற்பட்டு, அவர்களுக்கும் சிகிச்சை அளிக்கப்பட்டதாகச் செய்தி வந்துள்ளது. தீயணைப்பு இயந்திரங்கள் அங்கு வந்து, தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டிருந்தன. இதனால் அப்பகுதியே பரபரப்பாக விளங்கியது. நோயாளிகள் பெரும் அவதிக்குள்ளாகியிருந்தனர். இவ்விபத்து பற்றி செய்தி அறிந்தவுடன், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக முன்னாள் அமைச்சர்கள், டாக்டர் சி. விஜயபாஸ்கர், திரு. கடம்பூர் ராஜூ மற்றும் சட்டமன்ற உறுப்பினர் திரு. மு. ஜெகன் மூர்த்தி உட்பட 10–க்கும் மேற்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் பாதிக்கப்பட்ட பகுதிக்கு நேரில் சென்று, மீட்புப் பணிகளைப் பார்வையிட்டு, பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கும், மருத்துவர்களுக்கும் ஆறுதல் கூறினர். மேலும், அவர்கள் தங்களுக்கு உணவு வேண்டும் என்று கோரிக்கை வைத்தனர். உடனடியாக முன்னாள் அமைச்சர்கள் டாக்டர் சி. விஜயபாஸ்கர், திரு. கடம்பூர் ராஜூ மற்றும் கழக சட்டமன்ற உறுப்பினர்கள், அவர்களுக்குத் தேவையான உணவு மற்றும். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், அங்கே செய்ததையெல்லாம் பதிவு செய்ய வேண்டுமா? நீங்கள் விஷயத்தைச் சொல்லிவிட்டீர்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள். (குறுக்கீடு) Zero Hour–ல் இவ்வளவு பதிவு தேவையா என்று நான் உங்களிடம் கேட்கிறேன்? (குறுக்கீடு) அதேபோன்று அமைச்சர் போயிருப்பார், அவருடைய கட்சிக்காரர்கள் 100 பேர் சென்றிருப்பார்கள். இது, அவற்றையெல்லாம் பதிவு செய்வதற்கான நேரமா? மாண்புமிகு உறுப்பினர், பேசி முடியுங்கள்.

**திரு. எடப்பாடி K. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நேற்றைய நிகழ்வு குறித்து அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவந்தார். அதேபோல், ஒரு பிரதான எதிர்க்கட்சி, நடந்த சம்பவங்களைப் பற்றி அவையினுடைய கவனத்திற்குக் கொண்டு வருவதில் என்ன தவறு இருக்கிறது? அதைக்கூட நீங்கள் பதிவு செய்ய விடமாட்டேன் என்றால், எப்படித்தான் பேசுவது?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் சொல்வது, உங்களுடன் 100 பேர் கூட வருவார்கள். அதனைப் பதிவு செய்ய வேண்டுமா என்று கேட்கிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர், பேசுங்கள்.

**திரு. எடப்பாடி K. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதையுமே சொல்லக் கூடாது என்று நினைக்கிறீர்கள். ஆளும் கட்சிக்கு நடுநிலையாக. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், புனிதமாக பேசவிட்டிருக்கிறேன். பேசுங்கள்.

**திரு. எடப்பாடி K. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களைப் பேசவிட மாட்டேன் என்கிறீர்களே? இடையிடையே மறிக்கிறீர்களே!

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், பேசுங்கள்.

**திரு. எடப்பாடி K. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் உணவு, பழங்கள், ரொட்டி, தண்ணீர் பாட்டில்கள் போன்றவற்றை வழங்கியுள்ளனர். வருங்காலத்தில் இதுபோன்ற நிகழ்வுகள் ஏற்படாவண்ணம், மாநிலத்தில் உள்ள அனைத்து அரசு பொது மருத்துவமனை நிர்வாகத்திற்கும், பொதுப் பணித் துறையினருக்கும் உரிய அறிவுரை வழங்க வேண்டும் என்று இந்த அரசை வலியுறுத்துகிறேன்.

## (இ) ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சிகளுக்கிடையே நடைபெற்ற விவாதம் குறித்த கடந்தகால சட்டமன்றப் பதிவுகள் நீக்குதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

*__திரு. எடப்பாடி K. பழனிசாமி:__ நேற்றையதினம் zero hour–ல் நாங்கள் ஒரு பிரச்சினையை எழுப்பினோம். முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பிரச்சினை. விதி 56–ன்கீழ் நாங்கள் கொடுத்தோம். zero hour–ல் எழுப்பினோம். அது ஒரு துயரமான சம்பவம். தஞ்சாவூர் மாவட்டம், களிமேடு கிராமத்தில் தேர்த் திருவிழா நடைபெற்றபோது, தேர் விபத்துக்குள்ளாகி 11 பேர் இறந்த சம்பவம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட நேற்று காலை இரங்கல் தீர்மானம் கொண்டு வந்தார்கள். மாண்புமிகு பேரவைத்

பேசியதை மட்டும்தான் repeat செய்திருக்கிறார்கள். ஆகவே, அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டியதில்லை என்று நேற்றே தீர்ப்பு கொடுத்துவிட்டேன். அதைத்தான் இன்றைக்கும் சொல்கிறேன்.

## *(ஆ)* சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் ஏற்பட்ட தீ விபத்து—*தொடர்ச்சி*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) அந்தப் பதிலைக் கேட்டுக்கொள்ளுங்கள். விதி 55-க்கு, ராஜீவ் காந்தி மருத்துவமனை தீ விபத்து தொடர்பான பதிலைக் கேட்டுக்கொள்ளுங்கள். மருத்துவமனை தொடர்பாக நீங்கள் கேட்டதற்கு பதிலைக் கேட்டுக்கொள்ளுங்கள். (குறுக்கீடு) பதில் முடியட்டும். நான் வாய்ப்புத் தருகிறேன்.*

**மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பதில் முடியட்டும், நான் வாய்ப்புத் தருகிறேன்.*

**மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று. . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள். ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனை நிகழ்வு குறித்து சொல்லிவிடுங்கள்.*

**திரு. ஜி.கே. மணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று உலகப் பிரசித்தி பெற்ற மருத்துவமனையான ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் ஏற்பட்ட தீ விபத்து குறித்து அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.*

*நண்பகல் 12-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இதுபோல் ஒரு செகண்டில் சொல்லி முடியுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர், கவனத்தை ஈர்க்கிறேன் என்று சொல்லுங்கள்.*

*2022 ஏப்ரல் 28]*

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது வரை நடைபெறாத விபத்து ஒன்று அங்கு நடந்திருக்கிறது. அந்த நேரத்தில், தீயணைப்புத் துறை வீரர்களும், மற்ற அதிகாரிகளும் அங்குபோய் தகுந்த பாதுகாப்பை அளித்திருக்கிறார்கள். 73 நபர்களையும் பாதுகாத்திருக்கிறார்கள். இது வரவேற்கக்கூடிய ஒன்றாகும். அவர்கள் கடமையைச் சிறப்பாகச் செய்திருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் போயிருக்கிறார்கள். நோயாளிகளை நல்ல முறையில் பாதுகாத்திருக்கிறார்கள். (குறுக்கீடு) எதிர்காலத்தில் பழைய கட்டடங்களில் உள்ள* wires*–ஐ எல்லாம் மாற்றி, இதுபோன்ற நிகழ்வு ஏற்படாத வகையில் நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று தங்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று நடைபெற்ற இந்தச் சம்பவம் என்பது, காலை சரியாக 10–21 மணிக்கு ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் இருக்கிற நரம்பியல் துறைக்கு சம்பந்தமான 105 வருடங்களான ஒரு பழமையான கட்டடத்தில், மின் கசிவு ஏற்பட்டு, இந்தச் சம்பவம் நேரிட்டது. அங்கு* ground floor *என்று சொல்லக்கூடிய தரை தளத்தில்* surgical store *ஒன்று இருக்கிறது. முதல் தளத்தில் நரம்பியல் சம்பந்தமான நோயாளிகள் இருக்கின்றார்கள். இரண்டாம் தளத்தில் நெஞ்சகம் சம்பந்தப்பட்ட நோயாளிகள் இருக்கின்றார்கள். ஒட்டுமொத்தமாக அந்தக் கட்டடத்திலும், அதனை ஒட்டியுள்ள அடுத்த கட்டடத்திலும் 128 பேர் சிகிச்சை பெற்று வந்த நிலையில், இந்த விபத்து ஏற்படுகிறது. விபத்து நேர்ந்த 5 முதல் 10 மணித்துளிகளுக்குள், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தஞ்சைக்குப் பயணமாகிக் கொண்டிருந்த நேரத்தில், அவருக்கு இந்தத் தகவல் தெரிந்தவுடன், உடனடியாக எனக்கும், எங்கள் துறையின் செயலாளருக்கும் தகவல் சொல்லி, மருத்துவமனைக்கு விரைந்து சென்று இந்தத் தீயணைப்புப் பணிகளில் உடனடியாக ஈடுபட வேண்டும், மீட்புப் பணிகளை வேகப்படுத்திட வேண்டுமென்று அறிவுறுத்தினார்கள். உடனடியாக அவர் சொன்ன பத்தாவது நிமிடத்தில் நானும், துறையின் செயலாளரும் ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனைக்கு*

[திரு. மா. சுப்பிரமணியன்] [2022 ஏப்ரல் 28

விரைந்தோம். நாங்கள் போகிறபோதே, தீயணைப்புத் துறை, காவல் துறை அலுவலர்களை தொலைபேசிமூலம் தொடர்புகொண்டு, மாண்புமிகு தமிழக முதல்வரின் கவனத்திற்கு இச்சம்பவம் வந்திருக்கிறது, அவர் சொல்லியிருக்கிறார். எனவே, உடனடியாக எல்லோரும் அங்கு வந்துவிடுங்கள் என்று சொல்லிக்கொண்டே சென்றோம்.

இதில் ஒரு மிகப் பெரிய அளவிலான மகிழ்ச்சி என்னவென்றால், சம்பவம் நடைபெற்ற 5-லிருந்து 10 நிமிடங்களுக்குள்ளாகவே, நான்கு தீயணைப்புத் துறை வாகனங்கள் மூலம் அங்கு வந்து மீட்புப் பணிகளில் ஈடுபடத் தொடங்கிவிட்டார்கள். மீட்புப் பணிகளில் ஈடுபடத் தொடங்கியவுடன்—நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், இப்போது, நாங்கள் அங்கு சென்று உணவும், தண்ணீரும் கொடுத்தோம் என்று சொன்னார். சந்தோஷம். இது எப்போது நடக்கிறது என்று சொன்னால், தீ விபத்து முடிந்து மூன்று மணி நேரத்திற்குப் பிறகு, ஒட்டுமொத்தமாக தீயணைப்புப் பணிகள் முழுமையாக முடிந்த பிறகு, அங்குள்ளவர்களுக்கு ஆறுதல் சொல்லப்போனாம் என்று அவரே சொன்னார். ஆறுதல் சொல்ல போனபோது உணவும், தண்ணீரும் வழங்கினோம் என்றார். அவர்களுக்கும், தி.மு.க. கட்சிக்கும் உள்ள வித்தியாசம் என்னவென்றால்—மீட்புப் பணிகளில் ஈடுபடுவதற்காகவே தமிழக முதல்வர் எங்களை நேரடியாக அனுப்பி வைத்தார். (மேசையைத் தட்டும் ஒலி) தீ விபத்து நடைபெற்றுக் கொண்டிருக்கும்போதே, கண் எரிச்சல் தாங்க முடியாமல், அந்தப் புகை மூட்டத்திற்குள் நானும், துறையின் செயலாளரும் உள்ளே சென்று மீட்புப் பணிகளில் ஈடுபட்டிருந்தபோது, அங்கிருந்த ஊடகவியலாளர்கள், உள்ளே போவது ஆபத்து, போகாதீர்கள் என்று சொல்லி, தடுத்துப் பார்த்தார்கள். ஆனால், அந்த ஊடகவியலாளர்களும்கூட நேரடியாகவே வந்து, அங்குள்ள நோயாளிகளை மீட்டார்கள். ஒட்டுமொத்தமாக, இந்த அரசு மேற்கொண்ட அதிதீவிர நடவடிக்கைகளின் விளைவாக ஓர் உயிர்கூட போகவில்லை. உண்மையிலேயே வேறொரு ஆட்சியாக இருந்திருந்தால், வேறு முதலமைச்சர் இருந்திருந்தால், வேறு யாரும் கண்டுகொள்ளாமல் இருந்திருந்தால், 128 பேர் பலியாகி இருப்பார்கள். மாண்புமிகு முதல்வர் எடுத்த வேகமான அந்த நடவடிக்கைகளின் காரணமாக, இன்றைக்கு 128 உயிர்கள் காப்பற்றப்பட்டிருக்கின்றன. உணவும், குடிநீரும் கொடுத்ததற்கு நன்றி.

*2022 ஏப்ரல் 28]* [திரு. மா. சுப்பிரமணியன்]

*எதிர்க்கட்சித் தலைவர் இன்னொரு செய்தியையும் சொன்னார். Tower 1, Tower 2, Tower 3 என்ற blocks எல்லாம் எங்கள் ஆட்சியில் கட்டியவை என்றார். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது சில உண்மை நிலவரங்களைத் தெரிந்துகொண்டு பேசுவது என்பது அவசியமான ஒன்று. கட்டடங்களைக் கட்டியது எல்லாம் கலைஞர். சுண்ணாம்பு அடித்தது, கட்டடத்தைத் திறந்து வைத்தது நீங்கள். முழுமையாக 99 சதவிகித கட்டடப் பணிகள் முடிந்ததற்குப் பிறகு, white wash-ம், colour wash-ம் செய்து திறந்து வைத்தது நீங்கள். மற்றொன்றைச் சொன்னார்கள். அந்த மருத்துவமனைக்கு ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை என்று பெயர் சூட்டியது கலைஞர். (மேசையைத் தட்டும் ஒலி) அதனால், 'நாங்கள் கட்டடத்தை கட்டினோம்' என்று நீங்கள் சொல்வது ஓர் அபத்தமான விஷயம். மேலும், பத்து வருடங்கள் நீங்கள் தொடர்ச்சியாக ஆட்சியில் இருந்தீர்கள். அந்த நரம்பியல் கட்டடம் என்பது சிதிலமடைந்து, பழைய கட்டடமாக பத்து வருடங்களாக இருக்கின்றது. அந்தக் கட்டடத்தின் வயது 105 வருடங்கள். பத்து வருடங்களாக ஆட்சியிலிருந்த நீங்கள் பராமரிப்புப் பணிகளை முறையாகச் செய்திருந்தீர்களென்றால், இந்த விபத்தே நேற்று நடந்திருக்காது. இந்த விபத்து நடக்க காரணமே, கடந்த பத்து ஆண்டுகளாக அந்தக் கட்டடத்தைச் சரியாக பராமரிக்காமல் போனதுதான்.*

*பிற்பகல் 12-05*

*மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் நேற்றைக்கே எங்களுக்கு இட்ட உத்தரவு என்னவென்றால், உடனடியாக அந்த 105 ஆண்டுகால கட்டடத்தை பொறியாளர்களை அனுப்பி ஆய்வு செய்து, அந்தக் கட்டடம் பயன்படுத்துவதற்கு தகுதியற்றதாக இருந்தால், உடனடியாக இடித்துவிட்டு மறு திட்ட மதிப்பீடு தயார் செய்து நாளை உங்களது மானியக் கோரிக்கையில் அதனை அறிவிக்க வேண்டும் என்று சொன்னார். அந்தவகையில், நேற்றைக்கு அதற்கான திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கின்றது. 65 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய கட்டடம் கட்டுவதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள் என்ற செய்தியைச் சொல்லி, (மேசையைத் தட்டும் ஒலி) நடந்துகொண்டிருந்தபோதே அதனைத் தடுத்த நிகழ்வுகளும், நடந்ததற்குப் பின்பும் அந்த மருத்துவமனையின் மருத்துவச் சேவை கொஞ்சமும்கூட பாதிக்கப்பட்டுவிடக் கூடாது என்பதற்காக*

ரூ.65 கோடியையும் தந்து புதிய கட்டடத்தைக் கட்ட உத்தரவிட்டிருப்பவர் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

## (அ) பெட்ரோல் மற்றும் டீசல்மீது மாநிலங்கள் விதிக்கும் மதிப்புக் கூட்டு வரியைக் குறைக்க வேண்டுமென பிரதமர் கூறியிருப்பது—*தொடர்ச்சி*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள். (குறுக்கீடு) திரு. நயினார் நாகேந்திரன் அவர்களிடம் ஒரு வார்த்தை கேட்டுவிட்டு வந்துவிடுகிறேன்.*

**திரு. நயினார் நாகேந்திரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர் திரு. செல்வபெருந்தகை அவர்கள் பேசும்போது, பெட்ரோல், டீசல் விலையைப் பற்றி பேசினார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் அதற்குப் பதிலளித்துப் பேசினார்கள். நமது அரசு வந்த பிறகு பெட்ரோலுக்கு ரூ.3 விலையைக் குறைத்தது என்பது உண்மைதான். இல்லையென்று சொல்லவில்லை. அதன்பிறகு சிறிது காலம் கழித்து மத்திய அரசு பெட்ரோல், டீசல் விலையை பத்து ரூபாய் குறைத்தது. அது ஒருபக்கம் இருந்தாலும்கூட, இந்தியா சுதந்திரமடைந்த பிறகு, 75 ஆண்டுகளாக இந்தியாவை ஆண்டது காங்கிரஸ் கட்சிதான் என்பது நம் அனைவருக்கும் தெரிந்ததுதான். திரு. செல்வபெருந்தகை அவர்கள் 2014 பற்றி பேசினார்கள். ஆனால் 1987–ல் பார்த்தால் ஒரு லிட்டர் டீசலின் விலை 2 ரூபாய் 83 பைசாதான். அதற்குப் பிறகு தொடர்ந்து காங்கிரஸ் கட்சிதான் மத்தியில் ஆட்சியில் இருந்தது. இரண்டு முறை திராவிட முன்னேற்றக் கழகத்தோடு கூட்டணியில் இருந்தது. ஆனால் 2014 ஆம் ஆண்டு. . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் அரசியல் பேச வேண்டாம்.*

**திரு. நயினார் நாகேந்திரன்:** *இல்லை, நான் விளக்கத்தினை மட்டும் சொல்கிறேன். இதனைப் பதிவு செய்கிறேன். நான் இதில் குறையாக எதுவும் சொல்லவில்லை.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அப்படிச் சொன்னால், பாரதப் பிரதமர் நான் வந்தால் டீசல், பெட்ரோல் விலையை*